சுற்றுநிருபம் 10/2015

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாண சபை
35, அம்மன் வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்
2015.07.29

வடமாகாணத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும்
சமாசங்களின் தலைவர்களுக்கும்

## உள்வாரி மட்டுப்படுத்தப்பட்ட எழுதுவினைஞர்/இலிகிதர் பதவியுயர்வு நடைமுறை

கூட்டுறவுச் சங்கங்களில் நிறைவேற்றாளர் தரத்தின் ஆரம்ப நிலைச் சம்பளக்குறியீடு இல 17 இல் சில பதவிகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு சங்கத்தினுள் பதவி உயர்வுகளைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாக இருப்பதால் அல்லது அறவே இல்லாதிருப்பதால் அப்பணியாளர்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பதவிகளைச் சேர்ந்தவர்களுக்கு அலுவலகத்தினுள் உயர்ந்த சம்பளக் குறியீட்டைக் கொண்ட எழுதுவினைஞர்/இலிகிதர் பதவிகளை வகிப்பதற்கான ஏற்பாடொன்றைச் செய்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அக்குறித்த பதவிகளாவன:

| | |
|---|---|
| காவலாளி | 315/17 |
| அலுவலக சேவகர் | 317/17, 318/17 |
| புத்தகம் கட்டுனர் | 320/17 |
| அச்சக வெட்டுனர் | 321/17 |

மேற்கூறிய பதவிகளைச் சேர்ந்த பணியாளர்கள் சம்பளக் குறியீடு 17இல் நிரந்தர நியமனம் பெற்ற திகதியில் இருந்து 10 வருட அனுபவத் தகைமையைப் பெற்றுள்ளவிடத்து அடுத்த 16 ஆவது சம்பளக் குறியீட்டு எழுதுவினைஞர்/இலிகிதர் பதவிக்கு பதவியுயர்வு செய்யப்படமுடியும்.

நிரந்தர அலுவலக சேவகர் 317/17 இல் ஒரு வருடமும் 317/16 இல் 9 வருடங்களும் (மொத்தமாக 10 வருடங்கள்) அனுபவத் தகைமையைக் கொண்ட பணியாளர்கள் மாத்திரம் 15வது சம்பளக்குறீயீட்டு எழுதுவினைஞர்/இலிகிதர் பதவிக்கு பதவியுயர்வு செய்யப்படமுடியும்.

இதற்கு கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்படுகின்ற பரீட்சை ஒன்றுக்கு பணியாளர்கள் தோற்றிச் சித்தியடைவதன் மூலம் தகைமை பெறமுடியும் (சித்தி புள்ளிகள் = 40). இவ்வாறான பரீட்சைகள் ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் விண்ணப்பம் கோரப்பட்டு ஆண்டின் நடுப்பகுதிக்கு முன்னர் பரீட்சையை நடாத்தி பெறுபேறுகளின் அடிப்படையில் பதவியுயர்த்த ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கும். பரீட்சைக்கான விண்ணப்பங்களின் போது விண்ணப்பதாரிகள் பரீட்சைக் கட்டணத் தொகையொன்றைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும். முக்கியமாகச் சங்கங்கள் தமது ஆளணியில் வெற்றிடமிருப்பின் மாத்திரம் விண்ணப்பங்களைச் சிபாரிசு செய்து ஆணைக்குழுவுக்கு அனுப்புதல் வேண்டும். குறித்த விண்ணப்பத்தின் மாதிரியொன்று இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.

2015.07.27 ஆம் திகதிய ஆணைக்குழுத் தீர்மானபடியானது.

பொ.வாகீசன்
செயலாளர்

பொ. வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணசபை

இணைப்பு – 1

மாதிரி விண்ணப்பப்படிவம்

உள்வாரி மட்டுப்படுத்தப்பட்ட எழுதுவினைஞர்/இலிகிதர் பதவியுயர்வு நடைமுறை

1.

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் : …………………………………………………..
2. தேசிய அடையாள அட்டை இல : …………………………………………………..
3. பிறந்த திகதி : …………………………………………………...
4. கூட்டுறவுச் சங்கத்தின் பெயர் : …………………………………………………..
   4.1தற்போதைய பதவி : …………………………………………………..
   4.2.பதவி கு.இல : ……………
5. 5.1 தற்போதைய பதவிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்ட திகதி : ………………………
   5.2 விண்ணப்ப முடிவு திகதியன்று குறித்த பதவியில் மொத்த சேவைக்காலம் : …… ஆண்டு …… மாதம் …… நாட்கள்

மேற்கூறப்பட்ட தகவல்கள் யாவும் உண்மை எனவும் நான் பரீட்சையில் சித்தியடையும் பட்சத்தில் எழுதுவினைஞர்/இலிகிதர் பதவியுயர்வினை ஏற்றுக்கொண்டு பணியாற்றுவேன் எனவும் உறுதியளிக்கின்றேன். அத்துடன் குறித்த பரீட்சைக்கான கட்டணத்தை செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை (பற்றுச்சீட்டு இல……….) கீழே இணைத்துள்ளேன்.

…………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

……………………..
திகதி

| பற்றுச்சீட்டினை இங்கே இணைக்கவும் |
|---|

2. தலைவரின் சிபாரிசு

குறித்த விண்ணப்பதாரி திரு / திருமதி / செல்வி …………………………எனது சங்கத்தில் ………. பதவிக்குறியீட்டில் / ச.கு.இலக்கத்தில் நிரந்தர நியமனம் பெற்று 10 வருடங்களைப் பூர்த்தி செய்த பணியாளர் ஆவார். இவர் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைவாராகில், குறித்த பணியாளர் எனது சங்கத்தில் வெற்றிடமாக உள்ள எழுதுவினைஞர்/இலிகிதர் 302/16 அல்லது 302/15 (பொருத்தமற்றதை நீக்கி விடுக) எனும் பதவிக்கு பதவியுயர்வு செய்யப்படுவார் என உறுதியளித்து இவரது விண்ணப்பத்தை சிபாரிசு செய்து கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவிற்கு முன்னளிக்கின்றேன்.

………………..
திகதி

…………………………………
தலைவரின் கையொப்பம்

(உத்தியோகபூர்வ முத்திரை)